

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், துணைத் தலைவர் எம்.எம். அப்துல் குத்தூஸ் (எ) இறையன்பன் குத்தூஸ், உறுப்பினர் முகமது ரபி ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# உதகை செல்ல இ-பாஸ் நடைமுறை!

உதகை, ஏப். 2 –

உதகை செல்ல நேற்று 6000 வாகனங்களுக்கு இ–பாஸ் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திற்கு வார நாட்களில் 6,000 வாகனங்களுக்கும், வாரயிறுதி நாட்களில் 8,000 வாகனங்களுக்கு மட்டுமே இபாஸ் வழங்கப்படும் என்ற நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்தது.

சர்வதேச சுற்றுலா தலங்களாக விளங்கும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானலுக்கு ஆண்டுதோறும் கோடை காலங்களில் லட்சக்கணக்கானோர் வருகின்றனர்.

இதனால் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்க, சென்னை உயர்நீதிமன்றம் கட்டுப்பாடுகளை விதித்து உத்தரவிட்டது. அதன்படி இ–பாஸ் நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்தது.

ஏப்ரல் 1ம் தேதி நள்ளிரவு 12 மணி முதல் சுற்றுலா பயணிகளின் வாகனங்களுக்கு கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ளது. ஒவ்வொரு நாளும் முதலில் விண்ணப்பிக்கும் சுற்றுலா பயணிகளின் வாகனங்களுக்கு மட்டுமே இ–பாஸ் வழங்கப்பட்டு அனுமதிக்கப்படும்.

ஆனால் நீலகிரி மாவட்ட பதிவு எண் கொண்ட வாகனங்கள், ஆம்புலன்ஸ், சரக்கு வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

நேற்று முதல் ஜூன் 30ம் தேதி வரை கட்டுப்பாடு அமலுக்கு வருகிறது. இந்த வாகன எண்ணிக்கை அடிப்படையில் இபாஸ் வழங்கும் வகையில் இணையதளத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நாளில் 4,000 வாகனங்களுக்கு இபாஸ் வழங்கப்பட்டு விட்டால், அதற்கு மேல் விண்ணப்பிப்போருக்கு வேறொரு நாளை தேர்வு செய்யும்படி அறிவித்துள்ளனர்.

## இளைஞர்களும், தன்னார்வலர்களும் பங்களிப்பை வழங்க வேண்டும்!

# ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு பாராட்டுக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப். 2–

ஏரிகளை சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் இதுபோன்று நம் இளைஞர்களும், தன்னார்வலர்களுக்கு தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைத்திட வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இளம் வயதிலேயே பொதுச் சிந்தனையுடன் ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்குப் பாராட்டுகள்! எடுத்துக்காட்டெனச் செயல்பட்டு இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் அவருக்கு வாழ்த்துகள்!**

**நீர்நிலைகளைத் தூர்வாருதல் – பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பது நீர்மேலாண்மையில் முக்கியமானது. தற்போது கூட நமது அரசின் சார்பில் 2,473 ஏரிகள், 344 அணைக்கட்டுகள், 4,879 கி.மீ வரத்துக் கால்வாய்கள், கால்வாய்கள் / ஆறுகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**




**நீர்நிலைப் பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகளைக் கொட்டுவதைப் பொதுமக்கள் தவிர்த்திட வேண்டும். நமது இளைஞர்களும் – தன்னார்வலர்களும் – சூழலியல் அமைப்புகளும் நிமல் ராகவன் போன்று தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைத்திட வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 02.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | விராலிமலை | சின்னக் கடைவீதி, இலுப்பூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மு.செந்தூர் பாண்டி |
| 2 | 03.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | புதுக்கோட்டை | கடைவீதி, பெருங்களூர், புதுக்கோட்டை | எழுத்தாளர் வே.மதிமாறன், பேனா தெய்வம் |
| 3 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 4 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 5 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 6 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 7 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 8 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 9 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் செல்வேந்திரன், வீ.வேல்முருகன் |
| 10 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 11 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 12 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |
| 13 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 14 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், செ.திலகவதி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 31–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி